தினமணி

திங்கள்கிழமை, 15 மே 2023

# குலசேகரம் ஹோமியோபதி கல்லூரியில் பட்டமளிப்பு விழா

குலசேகரம், மே. 14: குலசேகரம் சாரதா கிருஷ்ணா ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

தேசிய ஹோமியோபதி ஆணையத்தின் ஹோமியோபதி கல்வி வாரியத் தலைவர் தர்கேஷ்வர் ஜெயின் பங்கேற்று, மாணவர்-மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கி உரையாற்றினார்.




விழாவில் மாணவிக்கு பட்டம் வழங்கிய தேசிய ஹோமியோபதி ஆணையத்தின் ஹோமியோபதி கல்வி வாரியத் தலைவர் தர்கேஷ்வர் ஜெயின்.

கேரள வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் ராய் ஸ்டீபன் வாழ்த்திப் பேசினார். கல்லூரி ஆலோசகர் ரவி எம். நாயர் உறுதிமொழி வாசித்தார். கல்லூரித் தலைவர் டாக்டர் சி.கே. மோகன் தீபமேற்றினார். விழாவில், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் டாக்டர் என்.வி. சுகதன் வரவேற்றார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சிபின் நன்றி கூறினார்.